***பத்திரிக்கை வெளியீடு***
*Reserve Bank of India*

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

ஜனவரி 23, 2018

**உரிமம் ரத்து -போபால் நாக்ரிக் சஹகாரி வங்கி லிமிடெட், போபால்**

இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), ஜனவரி 17, 2018 தேதியிட்ட உத்தரவின் படி , மத்திய பிரதேசத்தின் போபால், போபால் நாக்ரிக் சஹகாரி வங்கி லிமிடெட் உரிமத்தை ஜனவரி 22, 2018 அன்றைய வர்த்தக முடிவின் பின் ரத்து செய்துள்ளது. மத்தியப் பிரதேசத்தின் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு வங்கியை மூடுவதற்கான உத்தரவை பிறப்பித்து வங்கிக்கு ஒரு லிக்விடேட்டரை நியமிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி, வங்கியின் உரிமத்தை ரத்து செய்தது ஏனெனில்:

i. வங்கிக்கு போதுமான மூலதன அமைப்பு மற்றும் வருமான வாய்ப்புகள் இல்லை. இது 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 56 உடன் படித்த பிரிவு 11 (1) மற்றும் பிரிவு 22 (3) (ஈ) விதிகளுக்கு இணங்கவில்லை.

ii. வங்கி அதன் தற்போதைய மற்றும் எதிர்கால வைப்புத்தொகைகளை கோரும்போது முழுமையாக செலுத்தும் நிலையில் இல்லை. இதனால் வங்கி ஒழுங்குமுறை பிரிவு 56 (பிரிவு) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு 22 (3) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949 –ன் படி பூர்த்தி செய்யவில்லை.

iii. வங்கியின் விவகாரங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால வைப்புத்தொகையாளர்களின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நடத்தப்படுகின்றன, இதனால் வங்கி ஒழுங்குமுறை சட்டம் 1949 –ன் பிரிவு 56 உடன் 22 (3) (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை வங்கி பூர்த்தி செய்யவில்லை.

iv. மூலதன பெருக்குதல் மற்றும் நிதி மறுசீரமைப்புக்கு வங்கி எந்தவொரு சாதகமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, மேலும் உறுதியான / சாத்தியமான புத்துயிர் திட்டம் எதுவும் இல்லை.

v. வங்கிக்கு செயல் நிலைக்கு திரும்ப போதுமான நேரமும் வாய்ப்பும் வழங்கப்பட்ட போதும், வங்கியின் நிதி நிலை சீராவதற்கோஅதன் மறுவாழ்வுக்கோ எந்த வித வாய்ப்பும் இல்லை.

vi. வங்கி தனது வங்கித் தொழிலை மேற்கொள்வதற்கு மேலும்அனுமதித்தால் பொது நலன் மோசமாக பாதிக்கப்படும்.

அதன் உரிமத்தை ரத்து செய்ததன் விளைவாக, போபால், மத்தியப் பிரதேசத்தின் போபால் நாக்ரிக் சகாரி வங்கி லிமிடெட் 'வங்கி' வணிகத்தை நடத்துவதற்கு வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 5 (பி) மற்றும் பிரிவு 56 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி வைப்புத்தொகையை ஏற்றுக்கொள்வது மற்றும் வைப்புத் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு உடனடியாக தடை விதிக்கப்படுகின்றது.

உரிமம் ரத்துசெய்யப்பட்டு, கலைப்பு நடவடிக்கைகள் தொடங்கப்படுவதால், டி.ஐ.சி.ஜி.சி சட்டம், 1961 ன் படி, போபால், மத்திய பிரதேசத்தின் போபால் நாக்ரிக் சஹாகரி வங்கி லிமிடெட் வைப்புத்தொகையாளர்களுக்கு பணம் வழங்கும் செயல்முறை தொடங்கப்படும். கலைக்கப்பட்டால், ஒவ்வொரு வைப்புத்தொகையாளரும் வழக்கமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்திலிருந்து (டி.ஐ.சி.ஜி.சி) ரூ 1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய் மட்டுமே) பண உச்சவரம்பு வரை தனது / அவள் வைப்புகளை திரும்பப் பெற உரிமை உண்டு.

அஜித் பிரசாத்
உதவி ஆலோசகர்

பத்திரிக்கை வெளியீடு: 2017-2018/2010